ஏப்ரல் - ஜூன் 2023-ஆம் மாதங்களுக்கு சம்பளம் வழங்கும் அதிகாரம் (Pay authorization for the month of April -June 2023)

பள்ளிக் கல்வித் துறை, தலைமைச்செயலகம், சென்னை - 600 009

**கடித எண். 4569 /பக5(1)/2023 - 1, நாள் 28.04.2023**

அனுப்புநர்

திருமதி. காகர்லா உஷா, இ.ஆ.ப.,
அரசு முதன்மைச் செயலாளர்.

பெறுநர்

அனைத்து மாவட்ட கருவூல அலுவலர்கள் /
சார் கருவூல அலுவலர்கள்.
சம்பளக் கணக்கு அலுவலர் சென்னை-01 / 08 / 35.
சம்பந்தப்பட்ட சம்பளக் கணக்கு அலுவலர்கள்.

ஐயா,

பொருள்: பள்ளிக் கல்வி - 2012-13 ஆம் கல்வியாண்டில் 100 அரசு/ நகராட்சி/ மாநகராட்சி உயர்நிலைப் பள்ளிகள் மேல்நிலைப் பள்ளிகளாக தரம் உயர்த்தப்பட்டது - இப்பள்ளிகளுக்கு அனுமதிக்கப்பட்ட 900 முதுகலைப் பட்டதாரி ஆசிரியர் தற்காலிகப் பணியிடங்களுக்கு ஏப்ரல், மே மற்றும் ஜூன் 2023 ஆகிய மூன்று மாதங்களுக்கு சம்பளம் வழங்க ஊதிய கொடுப்பாணை (Pay Authorization) - குறித்து.

பார்வை:
1. அரசாணை (நிலை) எண்.137, பள்ளிக் கல்வித்[ப.க2(2)] துறை, நாள் 08.06.2012
2. அரசாணை (1D) எண்.66, பள்ளிக் கல்வித் [பக5(1)] துறை, நாள் 24.04.2020.
3. பள்ளிக் கல்வி ஆணையரின் கடித ந.க. எண். 000613/ இல்/ இ3/ 2020, நாள் 06.04.2023.

-----

பார்வை ஒன்றில் காணும் அரசாணையில் 2012-13 ஆம் கல்வியாண்டில் 100 அரசு/மாநகராட்சி / நகராட்சி உயர்நிலைப் பள்ளிகளை மேல்நிலைப்பள்ளிகளாக நிலை உயர்த்தியும், இவ்வாறு நிலை உயர்த்தப்பட்ட மேல்நிலைப் பள்ளிகளுக்கு பள்ளி ஒவ்வொன்றிற்கும் ரூ.9300-34800 + தர ஊதியம் 4800/- என்ற ஊதிய விகிதத்தில் தமிழ், ஆங்கிலம், கணிதம், இயற்பியல், வேதியியல், உயிரியல், வரலாறு, பொருளியல் மற்றும் வணிகவியல் என 9 பாடங்களுக்கென 9 முதுகலை ஆசிரியர் பணியிடங்கள் வீதம் 100 மேல்நிலைப் பள்ளிகளுக்கு, 900 முதுகலை ஆசிரியர் பணியிடங்கள் தோற்றுவித்து ஆணை வெளியிடப்பட்டுள்ளது.

2. பார்வை இரண்டில் காணும் அரசாணையில் மேற்காணும் 900 முதுகலை பட்டதாரி ஆசிரியர் பணியிடங்களுக்கு கடைசியாக 01.01.2020 முதல் 31.12.2022 வரை மூன்றாண்டுகளுக்கு தொடர் நீட்டிப்பு வழங்கப்பட்டுள்ளது.

3. மேற்காணும் 900 தற்காலிக முதுகலைப் பட்டதாரி ஆசிரியர் பணியிடங்களுக்கு 01.01.2023 முதல் 32.12.2025 வரை மேலும் மூன்றாண்டுகளுக்கு தொடர் நீட்டிப்பு வழங்க பள்ளிக் கல்வி ஆணையர் அரசிற்கு கருத்துரு அனுப்பியுள்ளார். மேலும், தற்பொழுது, இப்பணியிடங்களுக்கு ஏப்ரல் – 2023 ஆம்

மாதத்திற்கு ஊதியம் பெறத்தக்க வகையில் ஊதியம் வழங்க ஊதிய கொடுப்பாணையினை (Pay Authorization) வழங்குமாறு பள்ளிக்கல்வி ஆணையர் அரசை கேட்டுக் கொண்டுள்ளார்.

4. மேற்குறிப்பிட்டுள்ள 900 தற்காலிக முதுகலைப் பட்டதாரி ஆசிரியர் பணியிடங்களுக்கு 01.01.2023 முதல் 31.12.2025 வரை மேலும் மூன்றாண்டிற்கு தொடர் நீட்டிப்பு வழங்குவது குறித்த பள்ளிக் கல்வி ஆணையரின் கருத்துரு அரசின் பரிசீலனையில் உள்ளது. இந்நிலையில், இக்கடிதத்தின் இணைப்பில் கண்டுள்ள பள்ளிகளுக்கு அனுமதிக்கப்பட்ட 900 முதுகலை பட்டதாரி ஆசிரியர் பணியிடங்களுக்கு ஏப்ரல், மே மற்றும் ஜூன்-2023 ஆகிய மூன்று மாதங்களுக்கு ஊதியம் பெற்று வழங்க ஏதுவாக ஊதிய கொடுப்பாணை (Pay Authorization) வழங்கப்படுகிறது. மேற்படி அலுவலர்களுக்கான ஏப்ரல், மே மற்றும் ஜூன்-2023 ஆகிய மூன்று மாதங்களுக்கு சம்பளம் மற்றும் இதர படிகளுக்கான ஊதியப் பட்டியல்கள் உரிய அலுவலர்களால் சமர்ப்பிக்கப்படும்பட்சத்தில், அவை ஏனைய இனங்களில் சரியாக இருக்கும் நிலையில், ஏற்றுக் கொண்டு ஊதியம் பெற அனுமதிக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறது.

5. இக்கடிதம், அரசாணை (நிலை) எண்.334, நிதி(வ.செ. பொது-I), நாள் 22.10.2022 இன்படி நிதித் துறையின் ஒப்புதல் பெறத் தேவையில்லை.

தங்கள் நம்பிக்கையுள்ள,

கா. சுப்பையா

அரசு முதன்மைச் செயலாளருக்காக.

நகல்:

பள்ளிக்கல்வி ஆணையநர், சென்னை-6

மாநிலக் கணக்காயர், சென்னை-18.

நிதி(கல்வி-II)துறை, சென்னை-9,

அனைத்து மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலர்கள்.

Joint Director (NSS), i/c
Commissionerate of School Education,
Chennai-600 006.